வகுப்பு : 10

தேர்வு எண் | | | | | | |

# திருப்புதல் தேர்வு, ஜனவரி- 2023

## தமிழ்

நேரம் : 3.00 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 100

பகுதி – I (மதிப்பெண்கள்:15)

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15X1=15

கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் ஏற்புடைய விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினைச் சேர்த்து எழுதுக.

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்

அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா இ) எம்+தமிழ்+நா ஈ) எந்தம்+தமிழ்+நா

2. தாய்லாந்து மன்னரின் முடிசூட்டு விழாவிற்கு எப்பாடல்களைத் தாய்மொழியில் எழுதி வைத்துப் பாடுகிறார்கள்?

அ) திருமந்திரம், திருவாசகம் ஆ) திருக்குறள், திருமந்திரம்

இ) திருவருட்பா, திருப்பாவை ஈ) திருவெம்பாவை, திருப்பாவை

3. "கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி" – இவ்வடிகளில் "மேகம்" என்னும் பொருள்தரும் சொல்.

அ) கோடு ஆ) செலவு இ) எழிலி ஈ) கொடு

4. "விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண மேன்மேலும் முகமலரும் மேலோர் போல" – இவ்வடிகள் இடம் பெற்றறுள்ள நூல்?

அ) கம்பராமாணயம் ஆ) கலிங்கத்துப்பரணி இ) முக்கூடற்பள்ளு ஈ) பெரியபுராணம்

5. குறுக்கங்கள் எத்தனை வகைப்படும்?

அ) மூன்று ஆ) நான்கு இ) ஐந்து ஈ) இரண்டு

6. செயற்கை நுண்ணறிவுக் கணினியான வாட்சன் சில நிமிடங்களில் ------ தரவுகளை அலசி, நோயாளி ஒருவரின் புற்றுநோயைக் கண்டுபிடித்தது.

அ) இருபதாயிரம் ஆ) இரண்டு இலட்சம் இ) இரண்டு கோடி ஈ) இருபது கோடி

7. 'சதம்' என்றால் ------ என்று பொருள்.

அ) பத்து ஆ) நூறு இ) ஆயிரம் ஈ) இலட்சம்

8. "நீரற வறியாக் கரகத்து" என்ற பாடலடியில் கரகம் என்ற சொல் இடம்பெறும் நூல் -------

அ) அகநானூறு ஆ) புறநானூறு இ) கலித்தொகை ஈ) நற்றிணை

9. "குண்டலமும், குழைகாதும், ஆடுக". இச்சொற்களுக்கான இலக்கணக் குறிப்பைக் கண்டறிக.

அ) எண்ணும்மை, வினையெச்சம் ஆ) எண்ணும்மை, வியங்கோள் வினைமுற்று

இ) முற்றும்மை, வினையெச்சம் ஈ) உம்மைத்தொகை, வியங்கோள் வினைமுற்று

10. மா. பொ. சிவஞானத்தின் 'எனது போராட்ட நூல்' ஒரு -------

அ) தன்வரலாறு ஆ) கவிதை இ) சிறுகதை ஈ) புதினம்

11. கு. ப. ரா. ஆசிரியராகப் பணிபுரிந்த இதழ்களில் ஒன்று -------

அ) தமிழ் ஊழியன் ஆ) தினமணி இ) இந்தியா ஈ) கிராம ஊழியன்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளி. (12,13,14,15)

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்;
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிரு பொருளென் செல்வம்



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

12. ‘கவிஞன் யானோர் காலக் கணிதம்’ என்று கூறியவர் --------

அ) பாரதியார் ஆ) பாரதிதாசன் இ) சுரதா ஈ) கண்ணதாசன்

13. கவிஞன், கருப்படு சொற்களில் வரும் நயம் -------

அ) மோனை ஆ) எதுகை இ) முரண் ஈ) இயைபு

14. புவி என்ற சொல்லின் பொருள் ------

அ) மலர் ஆ) காற்று இ) பூமி ஈ) நிலவு

15. பிரித்து எழுதுக – நானோர்

அ) நான் + நூர் ஆ) நா + னூர் இ) நான் + ஓர் ஈ) நா + னோர்

## பகுதி – II (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. வினா எண் 21–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 4X2=8

16. பாரதியாரின் பன்முகங்கள் யாவை?

17. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

18. பூக்களைத் தொடுக்கும் போது இறுக்கி முடிச்சிடுவதாலும் தளரப் பிணைப்பதாலும் நிகழ்வது என்ன?

19. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

வளி – வாளி, விடு – வீடு

20. இராசராசனின் நாட்டில் புலம்புவதும், அடைக்கப்படுவதும் எது?

21. ‘வினை’ என்று முடியும் குறட்பாவை எழுதுக.

## பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 5X2=10

22. தாவரங்களின் இளமைப் பெயர்களை எழுது.

23. ஜெயகாந்தன் இயற்றிய குறும்புதினங்களுள் ஏதேனும் நான்கினைக் குறிப்பிடுக.

24. பகுபத உறுப்பிலக்கணம் தருக. – ‘கிளர்ந்த’

25. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.

26. **கலைச்சொல் தருக.**

அ) **Emblem - Humanism**

குறிப்பு: **செவி மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்று வினா:**

**எதிர் மறையாக மாற்றுக.**

கொடுத்து சிவந்த, அருகில் அமர்க

27. அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தார் – தனிச் சொற்றொடர்களைக் கலவைச் சொற்றொடர்களாக மாற்றுக.

28. சிறுபொழுதிற்குரிய கூறுகள் எத்தனை? அவை யாவை?

## பகுதி – III (மதிப்பெண்கள்:18) பிரிவு – 1

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

29. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.

30. “மாளாத காதல் நோயாளன் போல்” என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

31. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்

“அறப்பணி ஓய்வதில்லை, ஓய்ந்திடில் உலகமில்லை” – எனக் கவிஞர் கூறக் காரணம் யாது?



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும். வினா எண் 34–க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

32. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக.

33. சித்தாளின் மனச்சுமையகள்
செங்கற்கள் அறியாது – இடஞ்சுட்டிப் பொருள் தருக.

34. அடிபிறழாமல் எழுதுக.
அ) "புண்ணியப் புலவீர்" எனத் தொடங்கும் திருவிளையாடல் புராணப் பாடல் (அல்லது)
ஆ) "தூசும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

பிரிவு – 3

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்கவும்.** 2X3=6

35. வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு – இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

36. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார்.அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

37. அருளொடும் அன்பொடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல் – இக்குறட்பாவிற்கு அலகிட்டு வாய்பாடு தருக.

பகுதி – IV (மதிப்பெண்கள்:25)

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5X5=25

38. மொழி பெயர்க்க.

**Malar** : Devi, switch off the lights when you have leave the room.
**Devi** : Yeah, we have to save electricity.
**Malar** : Out nation spends a lot of electricity for lighting up our streets in the night.
**Devi** : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!
**Malar** : I have read some other countries are going to launch these types of illumintaion satellites near future.
**Devi** : Superb news! if we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that lot power!

குறிப்பு: செவி மாற்றுத் திறனாளிகளுக்கான மாற்று வினா:

பத்தியைப் படித்து பதில் தருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவான போது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக் காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில், உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும் படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

வினாக்கள்:


1. பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.
2. புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
3. பெய்த மழை இத்தொடரை வினைத்தொகையாக மாற்றுக.
4. இப்பத்தி உணர்த்தும் அறிவியல் கொள்கை யாது?
5. உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாக நீவிர் கருதுவன யாவை?

39. அ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.

(அல்லது)

ஆ) 'சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம் என்ற தலைப்பில்', பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக.

40. படம் உணர்த்தும் கருத்தை நயமுற ஐந்து தொடர்களில் எழுதுக.



------------------------
------------------------
------------------------
------------------------
------------------------

41. வீட்டு எண் 12, பாரதியார் தெரு, சிலம்புநகர், கன்னியாகுமரி மாவட்டத்தில் அரசு மேல்நிலைப்பள்ளியில் பத்தாம் வகுப்பினை நிறைவு செய்த சிதம்பரநாதனின் மகன் கலைச்செல்வன் எழுத்தர் பணியில் சேர விரும்புகிறார். தேர்வர் தன்னை கலைச்செல்வனாகக் கருதி கொடுக்கப்பட்டுள்ள தன் விவரப் படிவத்தை நிரப்புக.

42. அ) மாநில அளவில் நடைபெற்ற 'மரம் இயற்கையின் வரம்' எனும் தலைப்பிற்கான கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்று முதல் பரிசு பெற்ற தோழனை வாழ்த்தி கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம் என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி அந்நாளிதழ் ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

## பகுதி – V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** **3X8=24**

43. அ) காற்று பேசியதைப் போல நிலம் பேசுவதாக எண்ணிக் கொண்டு பேசுக.

(அல்லது)

ஆ) பள்ளித் திடலில் கிடந்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும், அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.

44. அ) சா. கந்தசாமியின் 'பாய்ச்சல்' கதையில் வரும் 'அனுமார்' என்ற கலைஞனின் கலைத்திறனை விளக்குக.

(அல்லது)

ஆ) உங்கள் ஊரில் கடின உழைப்பாளர் – சிறப்பு மிக்கவர் – போற்றத்தக்கவர் – என்ற நிலைகளில் நீங்கள் கருதுகின்ற பெண்கள் தொடர்பான செய்திகளைத் தொகுத்து எழுதுக.

45. அ) நாட்டு விழாக்கள் – விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டு முன்னேற்றத்தில் மாணவர் பங்கு குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக.

(அல்லது)

ஆ) மழை நீர் சேகரிப்பு என்ற தலைப்பில் கட்டுரை வரைக.



Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com